Sec. Gr.-ல் 42 பேரும், **Ele. Gr**-ல் 46 பேரும் சேர்க்கப்பட்டனர். 1933-ல் படித்த ஸ்ரீமதி ரஞ்சிதம் பெர்னண்டோ, ஸ்ரீமதி இஞ்ஞாசியம்மாள் இவர்களின் குழந்தைகள் இப்போது **Sec. Gr.**-ல் படிக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறோம். அனாதை பிள்ளைகள் கட்டடம் அழகுடன் காட்சியளிக்கிறது. திறப்பு விழாவை சிறப்பிக்க கனம் அமைச்சர் லூர்தம்மாள் சைமன் அழைக்கப்படுவார்.

நம் மாணவியருக்கு சாப்பாட்டு அறையும், படுக்கும் அறையும் விரிவாக்கப்படுகிறது. வேலை என்று முடியும், என்று மக்களோடு வசதியாக இருக்கலாம் எனவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் விடுதித் தலைவர்.

உல்லாசப் பிரயாணம்.—

R.S.P. சம்பந்தமாக **Hr. Seniors** தம் ஆசிரியை இருவருடன் நாச்சியார்பட்டி சென்றனர். அவ்விடத்து ஆதாரப் பள்ளியின் தலைவர், பழைய மாணவி ஸ்ரீமதி குருவம்மாளின்

கணவர். ஆகவே அன்னாரும் இதர ஆசிரியரும் சேர்ந்து நம் மாணவியருக்குத் தேநீர் விருந்து நடத்தினர். அவர்கட்கு எம் நன்றி உரித்தாகுக. மீண்டும் ஒரு முறை குற்றால இன்பக்காட்சி களில் மனதைப் பறிகொடுத்தனர் மாணவர். 3 நாட்கள் 3 நொடியில் கழிந்துவிட்டதாக உணர்ந்தனர். கோட்டைப்பட்டிக் குச் சென்று சமூக சேவையை செயல் முறையில் காட்டுவது எங்ஙனம் எனப் பயிற்சி பெற்றார்கள் **Hr. Seniors.**

Sec. Seniors மைசூர், பங்களூர், திருச்சி, சென்று வந் தனர்.

ஆட்டங்கள்.—

வலைப் பந்தாட்டத்தில் **Sec. Senior**-ல் ஜான்ஸி, பத்மினி யைத் தோற்கடித்தது. **Junior**-ல் சிவப்பு நாடா, நீல நாடாவை வென்றது. எறி பந்தாட்டத்தில் **Hr. Senior**-ல் புனித மரி யன்னை குழு வெற்றி பெற **Hr. Junior**-ல் ரோஸ் குழு, லில்லி குழுவைத் தோற்கடித்தது.

பொதுக் கூட்டங்கள்.—

கடந்த ஆண்டுமலரில் நமது அதிசிரேஷ்ட தாயார் அவர் கள் பள்ளியை சந்தித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங் களில் 2 வெளிவந்ததல்லவா? அவர்கள் வரவு செப்டம்பர் 17-ல் நடைபெற்றது. அதன் விவரத்தை இங்கு தருகிறோம். தாயார் அவர்கள் திண்டுக்கல்லிலிருந்து தனி ஊர்தி ஒன்றில் முன்னாள் புரோவின்ஷியல் தாயார் அவர்கள்கூட வந்தனர். அன்று பள் ளிக் கொடி ஏற்றப்பட்டது. வாசல் அறையிலிருந்து தாயார் அறை வரை விதவிதமாக கோலங்களிட்டு அலங்கரித்த பெருமை மாணவியரைச் சாரும். வெயில் என்று பார்த்தது யார்? சூரியன் உச்சியில் நின்று கொளுத்திய வேளை. கூட்டம் கூட்டமாக மடத்தார் அத்தனை பேரும் வாசலறைப் பக்கத்து நிழலில் ஒதுங்கி நின்றனர். ஊருக்குள் தாயார் அவர்கள் வந்து விட்டார்கள் என்றதும், செல்வராஜ் சைக்கிளில் வேகமாக வந்து அறிவிக்கவே சிறு கூட்டங்கள் ஒரே நொடியில் கலைந்தன. ரஸ்தாவின் இருபுறமும் வரிசை ஏற்பட்டது. குழந்தைகள் சிரித்த முகத்துடன் நீலப் பாவாடை வெள்ளைச் சட்டை அணிந்து கைதட்ட தயாராய் நின்றனர். நம் மாணவர் வெள்ளை

தாவணியும், அவரவர் வகுப்பு முறைப்படியே சிவப்பு, பச்சை, கனகாம்பரம், ரோஸ் வண்ணத்தில் சட்டைகளும் போட்டுக் கொண்டு நின்றனர். கண் தெரியாத பெண்கள், முறி பெண்கள் இடையில் சேர்ந்தனர். வாசலில் வந்து இறங்கியதும் சிறு குழந்தைகள் இருவர், முன்சென்று புதிதாகப் பனை ஓலையால் செய்யப்பட்ட அழகிய மாலையைச் சூடி செண்டு ஒன்றையும் கையில் கொடுத்தனர். இந்நிலையில் இருபுறமும் நின்று கை தட்டி ஆர்ப்பரித்த முகங்களை இனிது நோக்கி, நோக்கி மெல்ல அடி எடுத்துவைத்து வந்தார், நம் அன்னை. மறுதினம் பாடற் பூசையின் துவக்கத்தில் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் பாடலும் இறுதியில் நன்றியறிந்த தோத்திரக் கீதமும் பாடப்பட்டன. 9 மணிக்குப் பின் நம் பாடசாலைக் கட்டடத்தினுள் நுழைந்த அன்னை தமக்கு முன்பே அறிமுகமான மாணவர், ஆசிரியரைக் கண்டு அளவளாவி, புதிய மாணவரைக் கண்டு அக மகிழ்ந்து வெளியேறுமுன் மணி 11 ஆகிவிட்டது. போட்டா போட்டியாக மாணவர் தத்தம் வகுப்புக்களை அலங்காரம் செய்திருந்தனர். அன்று மாலை அவர்களைச் சிறப்பிக்க நாடகம் ஒன்று நடத்தப்பட்டது.

வழக்கப்படியே சுதந்திர தினமும், குடியரசு தினமும், கொடியேற்றம் பேச்சுக்களுக்கிடையே சிறப்பாக நடைபெற்றன.

வன விலங்குகளின் தினமாகிய அக்டோபர் 10-ல் காட்டிலாகா அதிகாரியால் ஓர் சொற்பொழிவு ஆற்றப்பட்டது. பிராணிகளைப் பற்றிக் கூறிய உதாரணங்கள் உள்ளத்தைத் தொட்டன. தீப்பற்றி எரிந்த காட்டுப் புதரின் இடையில், இறக்கைகள் கருகி சதை வெந்த நிலையில் இறந்தபடி நின்று கொண்டிருந்த ஒரு பெட்டைகோழி, தன் இளம் குஞ்சுகளை இறக்கைக்குள் வைத்து கருணை செய்த காட்சியை அவர் கண்டாராம். மாணவர் அனைவரும் பிராணிகளை ஜீவ வதை செய்வதில்லை என்று வாக்குறுதி கொடுத்தனர்.

ஐ. நா. தினம், மூன்று சீனியர் மாணவிகள் சொற்பொழிவு ஆற்றினர். மாலையில் ஊருக்குள் நடந்த கூட்டத்தில் தற்போதைய பள்ளித் தலைவி லாசர் பேசினாள். இந்நகரசபை நடத்தி

வைத்த பாரதியார் விழாவில் **Hr. Senior, C.** வெள்ளைத்தாய்க்கு பேச்சுப் போட்டியில் முதல் பரிசும், **Sec. Senior L.** செலினுக்குப் பாடல் போட்டியில் 2-வது பரிசும் கிடைத்தது.

சுகாதார இலாகா ஆதிகாரி, திரு **M. P.** வெற்றிவேல் அவர்கள் சுகாதார பழக்க வழக்கங்களும், சாதாரண நோய்களும் என்பதுபற்றி, தனக்கே உரித்தான நகைச்சுவை ததும்ப பயனுள்ள சொற்பெருக்காற்றினார். மதுரை தியாகராஜ கல்லூரியின் விரிவுரையாளர், திரு. **A. K.** பரந்தாமனார் **M.A.,** அவர்களது தமிழ் மொழிச் செல்வத்தைக் கேட்டு ரசிக்கும் பேறு பெற்றனர், நம் பள்ளி மாணவரும். அதற்காக **C. M. S.** உயர்நிலைப்பள்ளி, மாணவர் தமிழ் சங்கத்திற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

கொண்டாட்டங்கள் .—

மடத்தில் சும்பாஷணை என்றால் மேகம் எங்கிருந்தும் கூடி விடும். ஆனால் நல்லவேளையாக அதிசிரேஷ்ட தாயாரின் வரவின் போது போடவிருந்த நாடகத்திற்கு சிறிது நேரத்திற்கு முன்பே மழை தூவி முடிந்துவிட்டதானது, வெப்பத்திற்கு இடையே பன்னீர் தெளிப்பதுபோல் இருந்தது. கண் தெரியாத பிள்ளைகள் வரவேற்புப் பாடல் பாடினர். அனாதைச் சிறுமியர் அழகான கோலாட்டம் ஆட, தையல் வகுப்பும பிள்ளைகள் நேர்த்தியான ஓர் நடனம் ஆடி மகிழ்வித்தனர். உயர்நிலைப் பள்ளியிலிருந்து ஓர் ஆங்கில நாடகமும், சில நடனங்களும் நடைபெற்றன. நம் மாணவர், கவிஞர் தாகூர் இயற்றிய கீதாஞ்சலியின் இரு பாடலுக்கு அபிநயம் பிடித்தனர். வெள்ளி ஜெபமாலை என்ற ஆங்கில நாடகம் நேர்த்தியாய் அமைந்தது. மேனாட்டு நடனம் ஒன்றும் ஆடினர்.

மாணவர் பிரிவுபசாரத்தின்போது **Juniors** தாமாகவே பயிற்சி செய்து நடத்திய நாடகமும் ஆட்ட பாட்டங்களும், முக்கியமாய் ஷாஜஹான் கனவும் வெகு நேர்த்தி. இதையே மீண்டும் பழைய மாணவர் சங்கத்திலும் காட்டினர்.

பொருட்காட்சி .—

இவ்வாண்டு மாவட்ட கலெக்டர், அன்னாரின் துணைவியோடு விஜயம் செய்து பொருட்காட்சியைத் திறந்து வைத்து, ஒவ்

வொரு சிறு பொருளேக்கூட உற்று நோக்கி, மாணவர்க்குப் பெரும் உற்சாகத்தை அளித்தனர். **R. S. P.**-ல் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதி காட்டப்பட்டது. ஸ்ரீமதி மேரி செல்லத் தாய் உழைப்பு அதிலே அபாரம். வீடுகள், மாடுகள், ஆடுகள் எல்லாம் மெழுகு மயம். திரு **D. M.** குருஸ் அவர்களின் உதவி யால் வீதிகள் மின் வெளிச்சத்தில் விளங்கின.

நாகர்கோவிலிலிருந்து வந்த நம் தாயார்மார் இக்காட்சியை எவ்வளவுதூரம் விரும்பினரெனின், அவர் தம் கண்காட்சிக்காக இவற்றில் சில பொருட்களை வாங்கிச் சென்றனர். குமாரி அந்தோனியம்மாள் முயற்சியில் அணைக்கட்டு ஒன்று கட்டப் பட்டிருந்தது. மலையிலிருந்து விழுந்த அருவி நீர் ஒன்றுசேர்க் கப்பட்டு வயலுக்கு விடப்பட்டது. பல நாட்டுப் படங்கள் சுவர்களை அலங்கரிக்க, ஆங்காங்கே மாதிரி உருவங்கள், பல நாட்டுச் சிறுவர் வாழ்க்கையை விளக்கி நின்றன. மாணவர் வெகு பிரயாசையுடன் இவற்றைச் செய்திருந்தார்கள். ஒரே ஓர் வாசலே இவ்வறைக்கு இருந்தபடியால், மாலை வேளையில் கூட்டம் அதிகரிக்கும்போது வெகு கஷ்டமாய் இருந்தது. நம் பள்ளிக்கூடத்தில் குடிமைப்பயிற்சி, தமிழ், விஞ்ஞானம், கணி தம் ஓர் அறையிலும்; உயர்தரப்பள்ளி, உயர்தர ஆரம்பப்பள்ளி களின் அழகான சித்திரம், கைவேலை, தையல் வேலைப்பாடுகள் மற்ருேர் அறையிலும் வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியைக் காணவந்தவர் தொகை சுமார் ஐயாயிரத்துக்கு மேலாகி விட்டது.

ஒளிப்படக்காட்சி .—

C. M. S. உயர்தரப் பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் ஐக்கிய நாட்டுப் படம் ஒன்று காட்டினார்கள். நகரசபையின ரால் காலரா, சுகாதார பழக்க வழக்கங்கள், மருத்துவப் பயிற்சி பெறுவோர், பிற்போக்கான மாணவர்க்குக் கற்பிக்கும் விதம், உணவு — சம உணவு, வங்காள நாடோடிப் பாடல்களும், ஆடல் களும் காட்டப்பட்டன.

தணிக்கை .—

நவம்பர் 21, 22-ல் நடைபெற்ற தணிக்கையில் அம்மையார் எழுதித்தந்த ஓர் பகுதி: ‘பள்ளி விடுதியோடு இணைந்திருப்பதா

லும் ஆசிரியருள் பலரும் இவ்விடமே தங்குவதாலும், வேலை நேர்த்தியாய் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்கள் அதிக ஒற்றுமையோடு உழைக்கிறார்கள். ஆசிரியர், மாணவ ரிடை மகிழ்ச்சிகரமாகிய உள்ளக்கிளர்ச்சி தோன்றுகிறது. குடிமைப்பயிற்சி நன்கு அளிக்கப்படுகிறது. பள்ளி அலுவல் அத்தனையிலும் உயர்ந்த நிலையைக் காணலாம்.

பற்பல செய்திகள் :—

D. M. Caritas மே 13-ல் கொடைக்கானலில் நித்திய வார்த்தைப்பாடு கொடுத்ததை ஊர் வந்ததும் தையல் வகுப்புப் பிள்ளைகள் கொண்டாடி நாடகமும் நடித்தனர்.

குமாரி செல்லத்தாய் சங்கிலி மே 22-ல் ஞானதீட்சை பெற்று குமாரி மேரி செல்லத்தாய் சங்கிலி ஆனார். மறுதினம் ஸ்ரீமதி மேரி செல்லத்தாய் காணிக்கை என்ற உறவில், பல்லாண்டு நமது உயர்நிலைப்பள்ளியில் வேலை பார்த்தவரான ஸ்ரீமதி லில்லி குருஸ் அவர்களது நாத்தனார் ஆனார். நம் இசை ஆசிரியர் ஸ்ரீமதி சாரதாவுக்கு, காமினி என்ற குழந்தை பிறந்துள்ளது. ஏழாண்டு குழந்தைக்காக தவமிருந்து, போன ஆண்டில் நம் பள்ளியில் நுழைந்த அதிர்ஷ்டத்தில் தேவகிருபையால் குழந்தை பிறந்துள்ளது. குமாரி ஜோன் கடந்த ஆண்டில் தனியே படித்து **B. A.**, எழுதித் தேர்ந்தார். இவ்வாண்டில் சென்னை சைதாப்பேட்டைக் கல்லூரியில் **B.T.**, வகுப்பை 3 மாதத்தில் படித்து முடித்து 2-வது வகுப்பில் தேர்ச்சிபெற்றதை மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.


பழைய மாணவியர் தினம்

ஜூலை 26


பழைய மாணவர் சங்கம் கூடவேண்டும் என்றால் எத்தேதியில் வைப்பது என்ற பிரச்சனை எழுகிறது. தற்போது உயர்நிலைப்பள்ளிகளில் பள்ளிக்கூட நாட்கள் 200 ஆகிவிட்டபடியால் சனிக்கிழமைகளில் கூட வேலைபார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியர் சங்கம் இடையில் வந்துவிடுகிறது. ஆகஸ்டு 3-வது சனிக்கிழமை சுதந்திர தினத்தை அடுத்து வருகிறது. இவற்றையெல்லாம் கவனித்து ஜூலை 4-வது வாரத்தில் வைப்பது என்று கமிட்டி முடிவு செய்தது. அதற்கு ஏற்க மாணவர் தொகையும் இம்முறை திருப்திகரமாயிருந்தது.

முதல் முதல் வந்த பெருமை கோடைக்கானல் T. அருள் மேரி, சிறியபுஷ்பம் கபிரியேல், பெரியகுளம் I. அந்தோனியம்மாள் இவர்களைச் சாரும். அடுத்து மணப்பாட்டிலிருந்து பெர்னதெத் கோஸ்த்தா செக்கண்டரி கிரேடு முதல் மாணவியாக வந்து சேர்ந்தாள். தவறாமல் சங்கந்தோறும் ஆஜராகும் சகோதரிகள் G. ஜோனும், G. தெரசாவும்; A. மேரி தனபதி, G. லூர்து இவர்களுடன் 8 மணிக்கெல்லாம் மதுரையிலிருந்து வந்து சேர்ந்தார்கள். உணவு மந்திரி தெரஸ் பர்னாண்டோ, வந்தவரை உவப்புடன் வரவேற்று ஆசிரியர் விடுதிக்கு அழைத்துச் செல்ல அதுவரை ஆரவாரித்துக்கொண்டிருந்த பாடல்கள் ஓய்ந்து, பேச்சுக் குரல்கள் எழுந்தன.

சனிக்கிழமை காலை விடிந்ததிலிருந்து மாணவர் வந்து கொண்டே இருந்தார்கள். வந்தவர்க்கு மட்டுமல்ல, தற்போதைய மாணவர்களுக்கும் கூட ஒரே குதூகல நாளாகத் தோன்றியது அன்று. அணியணியாக போட்டா போட்டியுடன் வேலையில் ஈடுபட்டார்கள், தற்போதைய மாணவர். மாடியில் அலங்காரமான கோலம் 'சிந்து' அணி போட்டது. தாழ்வாரம், படிக்கட்டு எங்கும் மாக்கோலம். சங். புரோவின்ஷியல் தாயார் அவர்கள் முதன் முதலாகக் கோலங்களைப் பார்த்ததால் அவற்றைப் பெரிதும் பாராட்டினார்கள். ஒருசிலர் மாவிலைத் தோரணங்களால் படியையும், வாயில்களையும் அலங்கரித்தனர். கரும் பலகைகள் வண்ணப் பலகைகள் ஆயின. அவ்வப்போது அலங்



Catechism exhibition: Lourdes and the Apparitions



The Needlework exhibition

காரத்துக்கிடையே மகிழ்ச்சிக் குரல்கள் — என் தோழியரைச் சந்தித்த ஆனந்தம்!

இவ்வாண்டு தூத்துக்குடியிலிருந்து 5 பேர் : யூஜின், அன்னுள், ரீற்ரு, அந்தோணியம்மாள், குட்டி நிர்மலா (D. M. கனிஷியஸின் தங்கை, ஆன்னுரின் பிரதிநிதியாய்) வந்தார்கள். ராயப்பன்பட்டியிலிருந்து A. சலேத்தும், சரோஜாவும் வந்தனர். 2 மணிக்குள் விருதுநகர், சிவகாசி, சாத்தூர், ராஜபாளையம் மாங்குடி, சுந்தரநாச்சியாபுரம், புதூர், புதுப்பட்டி இன்னும் பல இடங்களில் இருந்தும் இன்முகங்களுடன் வந்திறங்கினர். பாளையங்கோட்டையிலிருந்து ஒரு குஞ்சுகூட வரவில்லை.

2 மணிக்கு, மாடியில் கூட்டம் ஆரம்பமாகியது. சீனியர் மாணவிகள் படிகளில் அமர்ந்தனர். ஆனுல் கொஞ்சநேரத்தில் குபு, குபு என்று பழைய மாணவர்கள் புகவே பேசாமல் ஜூனியர் வகுப்புக்குள் ஓடிவிட்டனர். அது திறந்திருந்தபடியால் வசதியாயிருந்தது.

சங். புரோவின்ஷியல் தாயார் அவர்கள் தலைமை தாங்க இசைந்தார்கள். இசை ஆசிரியை இறைவணக்கம் பாட, தலைமை ஆசிரியை சங். தாயார் அவர்களை வரவேற்ருர்கள். தாம் ஒரு பழைய மாணவர் அல்லாவிடினும், தாயார் அவர்களின் கண்காணிப்புக்குட்பட்ட பாளையங்கோட்டை கல்லூரியில் தான் பயின்றதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொண்டார். தாயார் அவர்கள் மத்தியில் இருந்தது மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளித்தது. குமாரி தெரஸ் பெர்னுண்டோ, நம் பெரிய தாயார், பழைய மாணவர் மற்றும் அனைவருக்கும் நல்வரவேற்புக் கூறினுர். குமாரி கிறிஸ்டி பாடசாலை அறிக்கையை வாசித்தார். அடுத்தபடியாக பிரின்ஸிப்பால் ஆஜர் எடுத்த போது 111 பேர் எனக் கணக்கிட, பிந்தி வந்தவர்களையும் சேர்த்து 130 பேர் ஆனது. மம்சாபுரத்திலிருந்து ஸ்டெல்லா, தனம் தம் பள்ளியிலிருந்த ஜில்லா அதிகாரி வரவு கூட்டத்திற்குப் பின் ஓடோடி வந்தும் நாடகம் முடிந்தபின்தான் இங்கு வந்து சேர்ந்தார்கள். அன்று மத்தியானம் வழங்கப்பட்ட சந்தனத்தை மன மகிழ்வுடன் பூசிக்கொண்டு கூட்டத்தில் நடந்த சமாச்சாரங்களைத் திருப்தியுடன் கேட்டுக்கொண்டு

சந்தா பணத்தையும் செலுத்திச் சென்றனர். கூட்டத்திற்கு ஆஜரானவர்களில் **Hr. Gr.**-ல் **Sr. M.** பியாற்றீஸ் முதல் மாணவி. ஸ்ரீமதி வியாகுலமரி, ஸ்ரீமதி ரஞ்சிதம், இருவரின் மக்களும் தற்போது **Sec. Gr.**-ல் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இத் தாய்மார் முகம் பூரித்துப்போய் இருந்தது. அதைப் போலவே ஸ்ரீமதி ரஞ்சிதத்தின் தங்கை ஸ்ரீமதி லூர்து அந்தோனியும் முன்னாள் உடன் ஆசிரியை ஸ்ரீமதி மரிய பாக்கியமும் பூரித்த உள்ளங்களுடன் முதல் வரிசையில் உட்கார்ந்து இருந்தது கூட்டத்திற்கே தனிப் பெருமை அளித்தது. ஸ்ரீமதி சவரியம்மாள் தன் மருமகளை பள்ளியில் சேர்க்க ஜூலை மாதத்தில் வந்திருந்த தோடு இப்போது கூட்டத்திற்கும் முதல் தடவையாக வந்து கலந்து கொண்டார். மிகவும் பழைய மாணவர் வருவது காண்பவருக்குப் பெரும் உற்சாகத்தை அளிக்கிறது. ஸ்ரீமதி செல்வமேரி பங்களூரிலிருந்து தன் ஊருக்கு வரவேண்டியிருந்தது. ஆகவே பிரயாணத்தை பழைய மாணவர் சங்க தினத்துடன் ஒழுங்குபடுத்திக்கொண்டு, அவ்வளவு தொலைவிலிருந்து தன் இரு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார்.

எஸ்தர் பெர்னாண்டோ "நம் பள்ளி நீடூழி வாழ்க" என்று வாழ்த்துத் தந்தி கொடுத்தாள். சுகவீனத்தால் வரமுடியவில்லையாம். அநேகர் பணம் அனுப்பி வரமுடியாத காரணத்தைத் தெரிவித்தனர். மில்ரெட் திடீரென வந்த ஆபத்தான சுகவீனத்தினின்றும் பூரண குணப்படவில்லை. சீதா நோயாளியான தன் தாயாருக்குப் பணிவிடை செய்வதால் வர இயலவில்லை. **V.** லூர்துக்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் குழந்தை பிறந்தது. சிலர் உபாத்திமைச் சங்கத்திற்குப் போக வேண்டியதிருந்தது. சிலருக்கு வருடாந்தரத் தணிக்கை. ஆதலால் வரத் தடை. சிலருக்கு பிரயாணக் கஷ்டம். ஊர் தொலைவு. ஒரு சிலர் ரஜா பெற இயலவில்லை. ஆனால் இம்மாணவர் அனைவரும் நம்மோடு உள்ளத்தால் ஒன்றித்திருந்தனர் என்பது நிச்சயம்.

குமாரி அந்தோனியம்மாள், **D. M.** கரித்தாஸ், மாணவர்க்கு எடுக்கும் தையல், சித்திரப் பாடத்தில் அவர்கட்குள்ள திறமை, முயற்சியைப் பாராட்டி நித்திய வார்த்தைப்பாட்டின் ஞாபகார்த்தமாக பழைய மாணவர் சார்பில் ஓர் குடை, கொடையாக

அளித்தார். ஸ்ரீமதி மேரி செல்லத்தாய் நம் பழைய தலைமை ஆசிரியர் **D. M. Clet** ஒன்பது ஆண்டுகள் அளவில் செய்த அரும் பணிகளைப் போற்றிப் பேசினர். நம் தாயார் எந்த வேலையை எடுத்துக்கொண்டாலும் பயன் அடையும் விதத்தில் முடிவுற வைப்பர் என்பதற்கு சான்று தற்போதைய அனுதைப் பிள்ளைகளின் கட்டடம், பள்ளிக்கூட பஸ். தமக்குரியதல்லாத இந்த சமூகப் பணிகளிலேயே இப்படிப் பெரிதும் மனம் ஈடு பட்டு உழைத்தார் என்றால் போதனையைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? வகுப்பிலும், வகுப்பிற்கு வெளியிலும் அயராத கண் காணிப்புக்கொண்டு ஆங்கிலத்தில் பேசுகிறார்களா என்பதை விழிப்புடன் கவனித்து வந்தார்கள். வீட்டுக் கலையில் தேர்ச்சி, தோட்டம் போடுதல், தையல் மெஷினில் தைக்கப் பழக்கம், தேனீ வளர்ப்பு முதலிய பல்வேறு தொழிற் பழக்கமும் அளித் தார்கள். இவையெல்லாம் எடுத்துக்கூறப்பட்டது.

குமாரி சகுந்தலாவின் மங்கள வாழ்து ஆரம்பமானது. ஆறு ஆண்டு அலுவல் புரிந்து தற்போது மணமான ஸ்ரீமதி மேரி செல்லத்தாய்க்கு மணவாழ்த்துப் பரிசாக சங்கத்தின் பேரால் ஒரு 'டார்ச்' விளக்கு வழங்கினர். பின்வரும் கமிட்டி நபர்கட்கு இவ்வாண்டு மணமானதால் விசேஷ வாழ்த்துக் கூறப்பட்டது. பாளையங்கோட்டை மும்தாஜ், சிவகாசி கிரேஸ் ரத்தினத்தாய், மம்சாபுரம் கந்தம்மாள், ராஜபாளையம் ஆவுடை யம்மாள். மாஸ்டர் மகள் ஜெயாவின் மணத்தையிட்டு மாஸ் டரை வாழ்த்தியதோடு, இசை ஆசிரியர் குழந்தை பிறப்பை யொட்டி மங்கள வாழ்த்துக் கூறினர். ஜோன் **B.T.**, தேர்விற் கும் பாராட்டுக் கூறப்பட்டது. "எத்தனை தடவை கைதட்ட?" இப்படி வரிசையாய் வாழ்த்து வருகிறதே என்று மலைத்திருந்த கூட்டத்தை நோக்கி "என்ன கைதட்டமாட்டீர்களா?" என்று கூறியவுடன் மடை திறந்தாற்போல் மங்கல ஒலி எழும்பியது. ஒரே கைதட்டு!

அதன் பின்னர் தமது மூன்றுமாத கடின **B.T.**, படிப்பைப் பற்றி குமாரி **G.** ஜோன் விரிவுரையாற்றினர். என் போதனு அனுபவம் என்ற தலைப்பில் கிளாராவும், ரபேல் மேரியும் பேசி னர். கிளாராவுக்கு முதலில் சற்றுக் கூச்சம். ஒரு சில நாட்க ளாக இரவுதோறும் மெழுகுவர்த்தி கொளுத்தி வைத்துக்

கொண்டு பாராப்பாடம் போட்டதாக பின்னர் ஆசிரியர் சிலர் கூறிக் கேலி செய்தபோதிலும், பேசியபோது பாராப்பாடமாக இல்லை. அவளது வகுப்பு முதலில் வாசலறையின் பக்கமுள்ள முதல் அறையில் இருந்ததாம். அப்போது மாணவர்க்கு ஆட்களை வேடிக்கை பார்க்க நல்ல சந்தர்ப்பமாதலின் பாடத்தில் கவனம் சிதறும். சிற்சில வேளைகளில் கேட் புஷ்பக்காள் ஆட்கள் வந்திருப்பதாக இந்த, அந்த ஆசிரியர், மாணவர் இடம் சொல்லி விடுமாறு கேட்டுக்கொள்வதுண்டு. ஆகவே ஆசிரியர் கிளாராவை, 2-வது புஷ்பக்கா என்று கூப்பிடுவர். பழக்கத்தால் மாணவர்க்குக் கவர்ச்சிகரமாகப் பாடம் நடத்தும் முறையை கற்றுக்கொண்டாள் இப்போது.

M. ரபேல் மேரிக்குத் தமிழ்ப் பாடத்தில் பிரியம் அதிகம். (இவ்வாண்டு தமிழ் பரீக்ஷையில் முதல் அம்சமாக 67% எடுத்திருப்பது மெச்சத்தக்கது). நடுத்தரப் பள்ளியில் தமிழ் போதிப்பதில், தான் சென்ற வேகம், வேகத்தின் பலாபலன் மாணவரது கையெழுத்துத் திருந்த, கட்டுரை எழுதும் திறம் வளர, தான் கைக்கொண்ட வெற்றிகரமான முறைகள் யாவை என்பதுபற்றித் தன் அனுபவக் குறிப்புகளைக் கொடுத்தாள். அனுபவந்தானே சிறந்த ஆசான்?

நேரம் காற்றெனக் கடிதில் பறக்கவே பிரின்சிப்பாலின் நன்றி உரையுடன் கூட்டம் முடிவுற்றது. முடிந்ததுதான் தாமதம், கூட்டம் கூட்டமாக நின்று பேச ஆரம்பித்தனர் நம் பழைய மாணவர். அவரில் ஒரு சிலர் 20 ஆண்டுகளுக்குப் பின் சந்தித்தனர் என்றால், பேச்சு எவ்வளவு சுவாரஸ்யமாய் இருக்கும் என்று யூகித்துக்கொள்ளுங்கள். மாடியைவிட்டு இறங்குமுன் அதுவரை கட்டணம் கட்டாதவர், தம் பழைய கடனெல்லாம் சேர்த்து, சந்தா பணத்தைச் செலுத்தினர். அதே வேளையில் ஒரு சில மாணவியர், ஜூனியர் வகுப்பில் வைக்கப்பட்டு ஏற்கனவே மேலும் கீழுமாக தற்போதைய மாணவர்களால் புரட்டப்பட்டிருந்த, பள்ளி புகைப்பட ஆல்பங்களையும், திருமண அழைப்புக்களையும் உருட்டினர். இதற்குள்ளாக நம் பழைய சாப்பாட்டறையில் தேநீர் விருந்து தயாரிக்கப்பட்டது. சங். புரோவின்ஷியல் தாயார் அவர்களும் மற்றும் தாயார்மாருடன் சென்றது, தேநீர் விருந்துக்கு ஒரு படி

அதிகம் மதிப்புக் கொடுத்தது! இரு காரியதரிசிகளும் ஊக்க முடன் இதை நடத்தி வைத்தனர். அடுத்த ஆண்டு கட்டட வேலை பூர்த்தி பெற்றிருக்கும். அப்போது புதிய சாப்பாட்டறை யில் விருந்து நடைபெறலாம் அல்லவா? எங்கும் மகிழ்ச்சி யுடன் ஆரவாரித்துக்கொண்டிருந்தபோது நாடகத்திற்காக மணி ஒலித்தது.

ராஜபாளையம் மாணவர் மூவர் பாடிய இறை வணக்கத் துடன் $5\frac{1}{2}$ மணிக்கு நாடகம் ஆரம்பமானது. பழைய மாண வரில் சிலர் திரைக்கு முன் தரையில் உட்கார்ந்து அட்டகாசம் செய்துகொண்டு திரை எப்போது தூக்கும் என்று ஆவலுடன் உட்கார்ந்திருந்த காட்சி நேர்த்தி. குமாரி அம்மணி, குமாரி சகுந்தலாவின் பள்ளிச் சிறுமியர் துள்ளி ஆடிய ஜிப்ஸி நடனம் வெகு நன்ருயிருந்தது. செட்டியக்குடித்தெரு பள்ளி நிர்வாகி அவர்களுக்கு எமது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளு கிறோம். நம் 6, 7 வகுப்பு மாணவர்கள் பந்தடிமட்டையுடன் புதியவிதப் பயிற்சி ஒன்று திறம்படச் செய்தனர். உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்க்கும் செல்வம், ரோஸ்மேரி, மேரி, மிக அலங்காரமாக எழிலுடன் நடனம் ஆடினர். சிவாஜியின் மகன் சாம்பாஜிக்கு அன்பு காட்டிப் பண்பு கற்பித்த ஓர் பெண்மணி, துரோகியா? என்ற சிறு நாடகம் நன்கு நடிக்கப்பட்டது. அவ ரவர் தம்மால் இயன்றமட்டும் திறம்பட நடித்தனர்.

நம் இரு **B.T.**, ஆசிரியர்களின் விடாமுயற்சியால் பழைய ஏற்பாட்டு ரூத்போஸ் நாடகம், முதலில் சுருக்கம் சொல்லப் பட்டபின் 3 ரிக்கார்டுகள் வைத்து நடனமூலம் காட்டப்பட் டது. கண் கண்டார் கண்ணே கண்டார் என்றபடி அனைவரும் ஆவலுடன் கண்ணிமைக்காது கண்டார் நடனத்தை. வைலற் சரோஜா மெற்றில்டாவின் ஷாஜஹான் கனவு நடனம் நம் பள்ளியில் நடைபெற்ற நடனங்களில் தலை சிறந்ததெனலாம். இது 2-வது தடவையாக இப்போது நடிக்கப்பட்டது. அத் துடன் நாடகம் முடிவானது.

மாலை சம்பாஷணைக்கு முன் வருடா வருடம் வீட்டிற்கு ஓடிவிடும் ஸ்ரீமதி ஞானசௌந்தரிக்கு அன்று தப்பிக்கவியலாது விலங்கு போட்டுவிட்ட மாதிரி இருந்தது போலும், பிரின்சிப்

பால், சம்பாஷணையைப் பார்த்துவிட்டு வந்தனம் கூறும் உத்தியோகத்தை அளித்தபோது. ஆனால் சம்பாஷணையைத்தான் பெரிதும் விரும்பியதாகக் கூறி தனக்கு இந்தக் கடமையை அளித்தமைக்கும் வந்தனம் சொன்னார். நாடகம் முடிந்தவுடன் சில மாணவியர் பஸ் நிலையத்திற்கு விரைந்தனர். மற்றும் சிலர் தம் தோழியருடன் சென்று அவர்கள் வீடுகளில் தங்கினர். மறுநாள் விழாவிற்காக பெரும்பாலோர் இவ்விடமே தங்கிவிட்டனர். இரவு சாப்பிட்டபின் பேசி மகிழும் வேளை, மௌனம் என்று காட்ட மணி ஓங்கி, ஓங்கி அடிக்கவேண்டி இருந்தது. மகிழ்ச்சி தரும் நாட்களுக்கு முடிவில்லை. இன்னும் ஓர் நாள். மறுதினம் ஞானோபதேச விழா இருக்கிறதல்லவா ?

ஞானோபதேச விழா

எமது உதவி பங்குக் குரு சங். அந்தோனி சுவாமிகளின் தலைமையின் கீழ் இவ்வருட ஞானோபதேச விழா ஜூலைத் திங்கள் 27-ம் நாள் சிறப்பிக்கப்பட்டது. அதிகாலை திவ்விய பூசையின்போது சங். சுவாமிகள் "நீங்கள் போய் உலகெங்கும் பிரசங்கியுங்கள்" என்ற நமதாண்டவரின் மொழிகளைப் பற்றி பொருள் செறிவுற்றதோர் பிரசங்கம் நிகழ்த்தினார்கள். நமது ஆண்டவர் தமது அப்போஸ்தலர்களிடம் விட்டுச் சென்ற அந்த வேலை இன்றுவரை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றது. இன்று அவர் நம் முன்னால் நின்றால் அதே வார்த்தைகளைத்தான் நம்மிடம் திருப்பிச் சொல்லுவார். அதனை நிறைவேற்றும் வழிகளில் ஒன்று ஞானோபதேசம் கற்பிப்பதாகும்.

மனிதன் விஞ்ஞானத்தில் அதிக முன்னேற்றமடைந்திருக்கிறான். ஆனால் மெஞ்ஞானத்தில் மிகவும் பின்னடைந்திருக்கிறான். இன்றைய உலகில் அரசியல் கட்சிகளும், சினிமா போன்ற நவீன சாதனங்களும் மக்களைக் கெடுப்பதில் தீவிரமாய் உழைக்கின்றன. அவற்றால் கத்தோலிக்க வாலிபர்களும் கூட தவறிப்போகிறார்கள். வேத சத்தியங்களை அவர்கள் சரியாகப் படிக்காததே அதன் காரணமாகும். எனவே கத்தோலிக்கு ஆசிரியர்களின் கடமை: தங்களிடம் கற்கும் கத்தோலிக்கு மாணவருக்கு வேத சத்தியங்களை நன்கு போதித்து, கிறிஸ்துவ வாழ்வின் அடிப்படையை உறுதிப்படுத்துவதாகும். சிறுவயதில் ஞானோபதேசம் நன்கு கற்பதின் பயனை சங். சுவாமிகள் தம் சொந்த அனுபவத்தின் மூலம் விளக்கினார்கள். தாம் சிறுவயதில் ஞானோபதேசத்தை ஆர்வமுடன் கற்று பரிசுகளைத் தட்டிச் சென்றதை எள்ளி நகையாடி, விளையாட்டுகளில் அதிக ஊக்கம் காட்டிய நண்பன், விளையாடும்போது திடீர் மரணமடைந்தார். ஆனால் தாம் இன்று ஓர் திருமறை குருவாக விளங்குவதற்கு அடிகோலியது, அன்று ஆர்வமுடன் கற்ற ஞானோபதேசமாகும் என்றார்கள். கடைசியாக, போதிக்கும் அலுவலை மேற்கொண்டுள்ள யாவரும் ஞானோபதேசம் போதிப்பதையும் கடமையாகக் கொண்டு நமதாண்டவர் இட்டப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்று கூறி முடித்தார்கள்.

8-30 மணியளவில் மாடியறையில் கூட்டம் துவங்கிற்று. இறைவணக்கத்திற்குப் பின், குமாரி ரபேல் மேரி, சங். சுவாமிகளையும், சங். புரோவின்ஷியல் தாயாரவர்களையும், மற்றவரையும் வரவேற்க, குமாரி ஜோனு சென்ற ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார். குமாரி செல்வம் ரொட்ரிகோ நாலாம் கற்பனையைப் பற்றிய மாதிரிப் பாடம் நடத்தினர். பெற்றோர் மட்டில் நம் கடமைகள் எத்தனை வகைப்படும். அவர்கள் நமக்குச் செய்துவரும் ஆன்ம சரீர உதவிகள், அந்த கற்பனைகளால் விலக்கப்பட்டவை, அனைத்தையும் படிப்படியாக விளக்கினர். மடத்தில் பெற்றோர் இடத்திலிருக்கும் சங். பெரிய தாயார் செய்துவரும் உபகாரங்கள், உதாரணமாக அரண்மனை போன்ற பெரிய கட்டடம் கட்டியிருப்பது போன்றவைகளை எடுத்துக் கூறி, அவர்களுக்கும், வகுப்பில் ஆசிரியைகளுக்கும், பங்கு குருக்கள், மற்றும் பெரியோர்களுக்கும் நாம் செய்ய வேண்டிய கடமைகளை நான்காம் கற்பனை உணர்த்துகிறது என்று மாணவியரின் மனதில் நன்கு பதியச் செய்தார். இயேசு நாதர் சிறுவயதில் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நமக்கு முன்மாதிரிகைக் காட்டினர் என்பதையும் படங்கள் மூலம் விளக்கினர். குமாரி **A.** தொரஸ் கற்பித்திருந்த கும்மி பாடலும் பாடத்தை ஒட்டியதாக இருந்தது.

சங். சுவாமிகள் தம் தலைமையுரையில் காலஞ் சென்ற பதினைகாம் ஆசீர்வாதப்பர் என்னும் பாப்பரசர், இதுபோன்ற வருடாந்தர ஞானோபதேச விழாக்கள் நடத்துமாறு விடுத்த வேண்டுகோளை, தானறிய, ஸ்ரீவில்லிப்புத்தூர் கன்னியர் மடத்தில் நடைமுறையில் பின்பற்றுகிறார்கள், என்று கூறி இவ் விழாவை ஏற்படுத்திய கனம் பெரிய தாயார் அவர்களைப் பாராட்டினர்கள். பொதுவுடமைக்காரர் கடவுள் நம்பிக்கையை அழிப்பதற்காகக் கையாளும் முறைகளை எடுத்துக்கூறி, தீமையைப் பரப்ப அவர்கள் அத்தனை ஆர்வத்துடன் உழைக்கும் போது சத்தியத்தைப் பரப்ப நாம் முன்வரவேண்டிய அவசியத்தை விளக்கினர்கள். ஞானோபதேசம் கற்பது மட்டும் போதாது. அதனை நடைமுறையில் செயல்படுத்த வேண்டும். செயல்களின் மூலம் நன்கு கற்பிக்கலாம் என்பதனை ஒரு சிறு சம்பவம் மூலம் விளக்கினர்கள். சீன தேசத்தில் முதன் முதலாக கால் பந்தாட்டம் பாவும்போது, ஆறு மாதங்கள்

மண்டையை உடைத்து, புஸ்தகங்களைக் கற்று, சொற்பொழிவு களைக் கேட்டும் புரிந்து கொள்ளாத மாணவர்கள் அரை மணி நேரத்தில் விளையாடியேக் கற்றனர். அதுபோல நாம் கற்கும் வேத சத்தியங்களை வாழ்க்கையில் அனுசரித்து உணரவேண் டும் என்று வலியுறுத்தினார்கள்.

குமாரி ரபேல் மேரி, சங். சுவாமிகளுக்கும் பங்கு சுவாமி களுக்கும், ஏனையோருக்கும் நன்றி கூறியபின் குமாரி ஜோன் பழைய மாணவரின் சார்பாக நன்றி கூறினார். சங். சுவாமி களின் பிரசங்கத்திலிருந்து தன் மனதில் ஆழப் பதிந்தவைகளை எடுத்துச் சொன்னார். தன் கல்லூரி நாட்களில் ஞானோபதேசம் கற்பதில் சுவாமிகள் எத்தனை ஆர்வமுடையவராய் இருந்தார் கள் என்பதும், இவ்விழாவுக்கு தலைமை தாங்க தான் அருகதை அற்றவர் என்றுரைத்ததில் விளங்கிய தாழ்ச்சியும் எல்லோரும் கண்டுபாவிக்க வேண்டியவை. தன் மாணவிகள் ஞானோபதேசம் கற்பதில் வெகு அசிரத்தையாக இருக்கிறார்கள் என்று வருந் தினார். கத்தோலிக்கு ஆசிரியைகள் ஞானோபதேசம் கற்பிக்க விரும்பி முன்வர வேண்டுமென்று அழுத்திக் கூறி, தனக்கு அதில் ஆர்வம் ஊட்டிய **Rev. Mother Hadewych** அவர்களுக் கும் **Rev. Fr. Planchard S.J.**, அவர்களுக்கும் தன் நன்றியைத் தெரிவித்தார்.

பாப்பரசர் கீதத்துடன் விழா இனிது முடிவுற்றது.

ஜேன் லூயிஸ்

மத சம்மந்தமான கொண்டாட்டங்கள்

பொதுத் தியானம், செப்டம்பரில் சோந்தமரம் பங்குக் குரு, சங். ஜே. அருள், சே.ச., அவர்களாலும், சிதம்பராபுரம் பங்குக் குரு, சங். ஜேசுதாசன் அவர்களாலும் முறையே பெரிய வர், சிறியவர்களுக்கென 2 பிரிவாக நடந்தது. சிவகாசியில் இருந்து பழைய மாணவரும் மற்றும் சிலரும் வந்திருந்தனர்.

பொய்யா விளக்கின் ஆசிரியர், சங். ஆசீர்வாதம் சே. ச. அவர்கள், அக்டோபரில் விஜயம் செய்து நல்ல கத்தோலிக்கப் பத்திரிகைகளை மக்களிடையே பரப்புவது பற்றிப் போதித் தார்கள்.

தமது திருவிழாவின்போது சங். பெரிய தாயார் அவர்கள் இல்லாததால் நவம்பர் 3-ல் விழா கொண்டாடப்பட்டது. அத் துடன் சற்பிரசாத சபையின் வருடாந்தர விழாவும் நடந்தது. ஜெபமாலை தேவ இரகசியங்களுடன் விசுவாச மந்திரம் பற்றிய நடிப்பும் நன்கு அமைந்தது.

பெப்ரவரி 14-ல் தூத்துக்குடி, அதி. சங். டல்மேய்டா சுவாமி அவர்களால் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. பாளையங்கோட்டை சிரேஷ்டர், மிக. சங். மோத்தா சே.ச., அவர்கள் கெபிக்கு முன் வைப்பதற்கென வாங்கப்பட்டிருந்த புனித பெர்னதெத் சுருபத்தை மந்திரித்தார்கள். நூற்றுண்டு விழா ஞாபகமாக, லூர்து அன்னை பற்றி அமைந்திருந்தது. அதன் பிரிவுகள் : 1. திருச்சபை தேவதாயைப் பற்றிக் கற்பிப் பவை. 2. லூர்து தரிசனம் : மாதிரி கெபியும், படங்களும், புகைப்படங்களும் விளக்கம் தந்தன. புதிதாய் மந்திரிக்கப் பட்ட புனித பெர்னதெத் சுருபம் மையமான இடம் பெற்றது. 3. தேவதாய் உலக அன்னை என்பதை விளக்கும் பல்வேறு தேசத்துப் படங்கள்.

அதுபற்றி நமது மேன்மை தங்கிய அதி மேற்றிராணி ஆண்டகை அவர்கள் கூறுவது :

" ஸ்ரீவில்லி திரு இருதயப் பள்ளியில் பெண்கள் போதிக்கும், உபகரணங்களையும், கைவேலைகளையும் காட்டும் ஓர் கண்காட்சி அமைத்து அதில் தேவதாயின் காட்சிகள் அடங்கிய பகுதியும் அமைந்திருப்பதாகத் தெரிகிறது. நாம் அதற்காக மிக மகிழ்வதோடு பரலோக அன்னை தனது ஆசீரை, ஆசிரியர், மாணவர்கள் மீது அபரிமிதமாய் பொழியப் பிரார்த்திக்கிறோம்."

மார்ச் 16-ல் நமது பரிசுத்த தந்தையின் 81-ம் பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது. வெளி ஜனங்களுடன் மடத்தாரும் சுற்றுப்பிரகாரத்தில் கலந்து கொண்டனர். பரிசுத்த பிதாவின் படம் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு பக்தரின் ஜெபமும் பாடலும் தொடர, பெரிய கூட்டத்தின் முன் பவனி வந்தது. பெரிய கொடி முன் வர, சிறிய கொடிகளும் நிறைய ஏந்தப்பட்டிருந்தன. சுற்றுப்பிரகாரம் 6 மணிக்கு மடம் வந்து சேர்ந்தது.

பின், தாசில்தார் அவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பித்தது. பாப்பரசரின் அலங்காரமான வண்ணப் படம் மேடையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சந்தைப்பேட்டை ஆசிரியர் ஒருவர், தலைவரையும், மக்களையும் வரவேற்றார். உயர்நிலைப் பள்ளி மாணவர் ஓர் நாடகம் நடித்து, நடனம் ஆடினர். நியுமென் சங்கத் தலைவி குமாரி ஸ்டெல்லா மார்கிரேற் **B.Sc.**, நமது தந்தையின் வாழ்க்கை வரலாற்றில் தந்தையின் இளமைப் பருவம், அவரின் 14 மொழிகள் தெரியும் அறிவுத் திறன், கலை வளம், விஞ்ஞான அறிவு, மேன்மை, நீதி தவரு உள்ளம் இவைகளைப் பற்றிப் பேசினர். போதனுமுறை மாணவியர், மாதா முன் தாமரை நடனம் நடிக்க, பங்கைச் சேர்ந்த மாணவரால் பங்கிராஸ் நாடகம் நடிக்கப்பட்டது.

எல்லோரையும் கவர்ந்தது வழக்கறிஞர் திரு. பெப்பின் அவர்களின் பேச்சு. தமது சொற்பொழிவில் திருச்சபை சத்தியம் தவறாமையால் நேரிடும் இன்னல் பற்றிப் பேசினார். பின் கூட்டம் கலைந்தது. உதவிப் பங்குக் குரு அவர்களின் அயராத உழைப்பிற்கு அன்றைய விழா ஓர் நற் சான்று. ஜூன் மாதம் திவ்விய நற்கருணைச் சுற்றுப்பிரகாரம் நடந்தது. வழக்கத்துக்கு மாறாக மழையோ அன்றி அதன் சிறு சாயையோ இல்லை. பொது மக்கள் விரும்பும் வண்ணம் கீர்த்தனைகள் யாவும் தமிழிலேயே இருந்தன.

அமலிமலை திருயாத்திரை பழைய மாணவர் விழாவின் பின் நடக்கும். வழக்கம்போல, தேவமாதா சபை, சற்பிரசாத சபை வேலை ஒழுங்காக நடைபெறுகின்றது.

பூனைக்குட்டி

ஏதோ குட்டிக் 'கிளாஸ்' தலைப்பா? இல்லை. ஆசிரிய மாணவியர் ஒவ்வொருவரும் வளர்க்கும் அருமைப் பூனைக் குட்டியைப் பற்றித்தான் சொல்லுகிறேன். எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். என் வகுப்புத் தோழியரின் பள்ளி வாழ்க்கைக்குப் பூனைக்குட்டியே பிரதானம்.

அட! பள்ளியில் பயிலும் மாணவராவது, பூனைக்குட்டி வளர்க்கிறதாவது? அதுவும் 42 பேரும் ஆளுக்கொன்று வளர்ப்பதா? பூனைக் குறுக்கிட்டால் தீச்சகுனம் என்று வேறு முன்னோர் உரைத்துளனரே—என்று எண்ணுகிறீர்களா? என் பூனைக் குட்டி அபசகுனமாய் ஒன்றும் தோன்றவில்லை — எனக்கு. அது என்னோடு இருக்குமளவும், என் மனம் சந்தோஷமாகவே இருக்கிறது.

என் பூனைக்குட்டி பிறந்து, கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ ஆண்டுகளாகி விட்டன. அதன் அமைப்பைக் கொஞ்சம் கேட்கிறீர்களா? இரண்டே அவயவங்கள்தாம். ஒன்று வயறு; மற்றது இரண்டு காதுகள். பின்னதை நாங்கள் கைகள் என்றும் அழைப்பது உண்டு. பூனைக்குட்டி வயறு சுமார் ஒன்றரை சாண் உயரம் இருக்கும். அது சில சமயத்தில் பெருத்தும் மறு சமயத்தில் ஒடுங்கியும் இருக்கும். இக்கனபரிமாணம் படிக்கும் காலத்தை ஒட்டியும் திருவிழா ஓய்வு காலங்களை ஒட்டியும் ஆம். சிலவேளை வயிற்றுப் பாரம் தாங்கமாட்டாமல் இருபுறமும் பொருந்திய கைகளை எடுத்துக் கொள்ளும். கொலைக்கஞ்சாத எம்மில் சிலர், அவற்றின் கைகளை அப்படியே துண்டித்து விடுவர். அதன் காதுகள் அக்கக்காய் வந்து இரு காதுகளும் ஒன்றாகி, நீண்ட பெரிய காதாகவும், உயரத்தில் நீண்ட உருப்பெறும். காதறுத்தல் என்பதே இதற்குறும் நோய். உடனே ஊசிநூல் மருந்து தந்தால் சரிப்படும். வெட்டுப்பட்ட காதுகளை இணைக்க விரும்பாத சில சோம்பேறிகள் அருமையாக பூனைக்குட்டியை கைகளில் ஏந்திக் கொள்வர். அல்லது அவற்றைப் "பின்" கொண்டு இழுத்துக் குத்தி விடுவர். வயிற்றில் நாபிக்கமலம் போல் காணப்படும் எண்குறி. போலீஸ் இலாகாவில்தான்

எண்கட்கு மதிப்பு என்றால் எம்பள்ளியில் அதைவிட ஓர்படி ஏற்றமே எண் மதிப்பு. எம் ஒவ்வொருவருக்கும் ஓர் வரிசை எண், எண்தோழி எல்லாமுண்டு.

ஆமாம், என் பூனைக்குட்டியின் நிறம் என்ன என்று இது வரை சொல்லவில்லையே, இதுகூடவா தெரியாது? வெள்ளை கறுப்பு, கபில வண்ணம் — என்பீர்கள். இப்படி ஏந்த வண்ணத்திலும் இல்லை என்னுடையது. எம் பூனைக்குட்டிகளின் நிறமோ கருஞ்சிவப்பு. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு நிறமான பூனைக் குட்டிகள் கொடுத்திருக்கிறார்கள் வளர்ப்பதற்காக.

வளர்ப்புத் தாயாம் நான், அதற்கு உணவு அளிக்க வேண்டாமா? தோசைக்குப் பொடி எடுக்க மறந்துவிட்டது என்று நான் சாப்பிடாமல் இருந்த நாளிலும்கூட என் பூனைக் குட்டிக்கு நான் வேண்டிய உணவு கொடுக்காமலில்லை. துவக்கத்தில் சிறிதுதான் சாப்பிட்டது. ஓர் வருடங் கழித்து இவ்விடத்து பலகாரக் கடையில் செய்யும் எண்ணெய்ப் பலகார தினுசுகள்; பருப்புவடை, உருண்டை வடை, வீட்டிலிருந்து கொண்டுவந்த சீடை, முறுக்கு, கடையில் வாங்கிய கடலை மிட்டாய் முதலிய தின்பண்டங்களுள், எதைக் கொடுத்தாலும் வெறுக்காது விழுங்கிவிடப் பழக்கம் ஏற்பட்டு விட்டது. அன்பு முற்றி விட்டாலோ ஆகாரத்தை வயிறு நிறையத் திணித்து விடுவேன். விசேஷமாகப் பரீக்ஷை சமயம் அது புடைத்து விடும். இதென்ன இது வயிறா, குதிரா என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு. ஏனெனில் தின் பண்டங்களோடு, சீப்பு, ரிபன், பேனா, 'பாட்ஜ்', தையல் துணி, ஊசி, நூல்; கொண்டைவலை, வளையம்; பேனா, பென்சில், புத்தகம், நோட்டு; இத்தியாதி பலரகப் பொருட்களையும் ஏற்கும் இன்முகத்துடன். ஏற்பதுமட்டுமல்ல, வேண்டும்பொழுது வேண்டுவதை மீண்டும் தரும் கற்பகத்தருவும் ஆகும்.

என் இத்தகைய அருமைப் பூனைக்குட்டியின் வாசஸ்தலம்? வகுப்பில் — கீழே இராது. ஒன்றில் என் சாய்வு மேஜைக்கு அடியில் தொங்கும். அல்லது நாற்காலி கழுத்திலே ஊஞ்சலாக ஆடும். என்னோடு நாற்காலியில் அமர்வதுமுண்டு. சமயத்தில்

என் நாற்காலியினடியில் தூங்கவைப்பேன். அப்போதெல்லாம் மணியடித்ததும் எனக்கு முன் எழுந்துவிடும், என் அருமைப் பூனைக்குட்டி. உடனே தூக்கித் தோளில் போட்டுக்கொள்வேன். சிலவேளை தோளில் சொகுசாகத் தொங்கும். சிலசமயம் இடுப் பிலே மிடுக்குடன் இருக்கும். ஒரு சிலநேரம் கரங்களிலே தொங்கிவரும். என் பூனைக்குட்டிக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. நான் போகுமிடமெல்லாம் பவனி வரும். குளிக்கச் சென்றால் குளிக்கும் அறையில் தட்டுமேல் ஏற்றிவிடுவேன். சிற் சில வேளைகளில் அதையும் குளிப்பாட்டுவதுண்டு. ஆனால் அது வழக்கமல்ல. வரிசையில் போகும்போதும் பூனைக்குட்டி என்னை விட்டுப் பிரிவதில்லை. இது எவ்வளவுதூரம் உண்மை என்றால், கோவிலுக்குச் செல்லும்பொழுது கூட சில பிரகஸ்பதிகளின் பூனைக்குட்டிகள் அவர்கள்மேல் சவாரி செய்யும். சிலர் தம் குட்டிகளை முன்னால் கிடத்திவைத்து நிம்மதியாய் அதற்கும் சேர்த்து கும்பிடுவர். படுக்க நேரமாகியதா? என் தலையணை யின் மறுபுறம் அதுவும் தலைவைத்துத் தூங்கும். அல்லது, பக் கத்தில் அயராது கண்விழித்து, சீராட்டித், தாலாட்டித் தூங்க வைக்கும் இயல்பினது, யாம் கற்ற திருச்செந்தூர் வெண்மைச் சிறைப்புள் ஓதிமங்களைப் போல்.


என் பூனைக்குட்டியைப்போல் என்மேல் விசுவாசமுள்ளது எது? உடலோடு ஒட்டி இருப்பது உயிர். உயிரொடும், உட லொடும் ஒட்டியிருப்பது இந்த என் அருமைப் பூனைக்குட்டி. நான் என்றால் அதற்கு உயிர், அது என்றால் எனக்கு அலாதி இன்பம். என் தோழி என் அருகில் இல்லாதபோதுகூட எனக்கு உறுதுணையாக இருந்து சகல விதத்திலும் உதவி புரிவது அது ஒன்றுதான்.

என் பூனைக்குட்டி இல்லாவிட்டால் எனக்கு ஓர் கை முறிந்த மாதிரி இருக்கும்; ஏதோ ஒன்றை இழந்ததாக உணர்வேன். இந்நிலையில், ஓர் வெள்ளிக்கிழமை உலாவச்செல்லத் தயாரான போது எம் வகுப்பு மாணவியர் அத்தனை பேரிடமும் பூனைக் குட்டிகள் இருந்தன. எம்மை எம் பூனைக்குட்டிகளோடு காணும் காட்சியைக் காண்போர் கண்ணே, கண்; “கண் இமைத்துக் காண்பார் தம் கண் என்ன கண்ணே,” என்ற சிலப்பதிகார வரி கட்கு சாட்சியாக நின்று கொண்டிருந்தோம். வண்டிறைச்சலை

செவிமடுத்த சங். பெரிய தாயார் அவர்கள் தம் அறையினின்றும் வெளிப் போந்தார். "இனிமேல் பூனைக்குட்டி உலாவப் போகக்கூடாது. வெளியே போகும்போது கூட்டிச் செல்லலாகாது" என்ற தடையுத்தரவைப் பிறப்பித்துவிட்டார். உருவை விட்டகலா ஒண்ணிழல் ஒத்த எம். பூனைக்குட்டிகளை மரத்தடியில் போட்டுவிட்டுச் சென்றோம். அப்பப்பா! பார்க்க வேண்டுமே எம் ஒவ்வொருவர் முகத்தையும்! திரும்ப வந்ததும் என்னை ஏற்றுக்கொள்ளமாட்டாயா என ஏங்கியவண்ணமிருந்த என் பூனைக்குட்டியை வாரி அணைத்துக்கொண்டேன். சிற்சில வேளைகளில் இப்படி தடையுத்தரவுகள் சாப்பாட்டு விடுதிக்குப் போகும் வழியிலேயே எம் தமிழ் ஆசிரியை அவர்களால் பிறப்பிக்கப்படும். அந்நிலையில் செய்வதறியாது, பின் பிரிந்து வருந்தியதுண்டு.

பள்ளியில் யார் யாரைப் பிரிந்தாலும் என்னைவிட்டுப் பிரியாமல் என்னுடனேயே வரப்போவது யார்? இனிமேல் என்றும் பிரியோம், எப்போதும் என்னோடுதான். ஆனால்...... கையில், தோளில், இடுப்பில் எடுத்துச் செல்லும் வாய்ப்பு இனி என் அருமைப் பூனைக்குட்டிக்கு உண்டா? பெட்டியில் பத்திரமாக இருந்து ஓய்வு எடுக்கும். ஒன்றரை ஆண்டிற்குள் அது தன் முதுமையை அடைந்துவிட்டது. இனி 'பென்ஷன்' காலம். பூனைக்குட்டியின் பேரிலா இவ்வளவு அன்பு என்று நினைப்பீர்கள். அது ஒரு பூனைக்குட்டியாக இருந்தால்கூட பரவாயில்லை. ஆனால் அது என் தையல் பையே. அதற்கு எம் தமிழ் ஆசிரியை அவர்களால் கிடைக்கப்பெற்ற செல்லப் பெயர், புனைப்பெயர் தான் பூனைக்குட்டி. என்னே அழகு!

Sec. Gr. Seniors, 57—58



Sri S. V. R. Panickar, I. A. S. Collector of Ramnad
and Smt. Panickar visit our Institution



The Collector addresses
Staff and Students



The Collector opens
the exhibition

எங்கள் பெட்டி அறை

எங்கள் பெட்டி அறை ! பார்வைக்கு கூரை வேயப்பட்ட ஓர் குடிசை என்பீர்கள். உண்மைக் குடிசை என்று ஏளனமாய் எண்ணிவிடாதீர். அனுபவம் வாய்ந்த பழங்காலப் பெட்டியறை இது. ஆகவே அனுபவ மிகுதியால் ஆன கம்பீரத் தோற்றமும் உண்டு. மேலே கூரை, சுற்றி சிறு கைபிடிச்சுவர். அதன் மீது மூங்கில் தட்டிகளால் பின்னல்வேலை ஜன்னல்கள்; கண்ணாடி ஜன்னல்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன். எம் பெட்டி அறையே இப்பள்ளியில் எங்களது சொர்க்கம். இச்சொர்க்கத் தின் வாசல்கள் இரண்டு. ஒன்று மோட்சவாசலைப் போன்று இடுக்கமானது. மற்றொன்று சற்று அகன்று வெளிச்சம் உள் விடுவது. இவ்வாசல்கள் வருவோரை வாய்விட்டு உபசரிக்கவும் வகையில்லாதவை. ஆனால் உள் நுழைபவரைத் தட்டிக் கொடுத்து அவர்கள் தம் தலையைத் தடவிக்கொள்ள வைப் பவை. வண்ணான் தாத்தாவின் வழுக்கைத் தலை ஓர் நாள் உப சரணையில் பட்டபாடு! அவர் தலையில் செந்நீர் பீறிட்டுவிட்ட தென்றால், இவ்வாயில்களின் உயர்ந்த குணத்தைப் புகழா திருக்க இயலுமோ ?

எங்கள் செல்வ பங்களாவின் காவலாளிகள் யார் தெரியுமா? கைமாறு கருதாது கௌரவ சேவை புரியும் இரு தகர 'டின்கள்' தான். இவர்கள் எத்தனை வருடங்களாக பணி புரிகின்றனரோ, தெரியாது. ஏனெனில் அதே கம்பெனியைச் சேர்ந்த வேறு டின்கள், வயதானவரை மாற்றி அதே இடத்தில் காவலுக்கு நிற்பர். எம் பெட்டி அறையின் அழகுதான் என்னே !

இதைத் திறப்பது ஒருவர். அடைப்பது மற்றொருவர். மோட்ச வாசலைக்கூட புனித இராயப்பர் விரைவில் திறந்து விடுவர் போலும். இவ்வளவு கிராக்கி இல்லை அவருக்கு. ஆனால் எம் பெட்டி அறையைத் திறக்கும் பாவையோ அதைத் திறக்கு முன், எங்கள் பள்ளித் தோழியர் அனைவரையும், கூட்டிவைத்து, ஓர் திறப்பு விழாவையே நடத்தி, கௌரவித்து விடுவாள். இக் காலம் ஓர் சிறு குடிசையைப் புதிதாகத் திறக்கக்கூட மந்திரி வந்துதானே ஆகவேண்டியதிருக்கிறது ! சில நாட்களில் வாசல் திறக்கவே படாது. அப்போது, வருவோரெல்லாம் " இன்று

திறக்கமாட்டார்களா ?" என்ற ஒரே பல்லவியை, அதன் பின் அனுபல்லவியாக "ஏன் திறக்கமாட்டார்கள் ?" என்பதையும் மாறி மாறிப் பாடிச் செல்வர். சில கௌரவ அங்கத்தினர், உடனே, ஆண்டவரின், "தட்டுங்கள் திறக்கப்படும்"; என்ற அருள் வாக்கை உரைத்தபடி, கதவைத் தட்டி மகிழ்வர். திறக்கப்படும் அளவு விசுவாசம் இல்லையே ! வழக்கத்திற்கு மாறாக நெடு நேரம் காக்கப்போட்டுவிட்டால், தாய் முகம் காணு சேய் போல், எம் முகம் வாடிப்போம்.

இவ்வித ஏக்கத்துடன் தொங்கிக் கொண்டிருக்கையில் திறந்துவிட்டார்களோ, பார்க்கவேணுமே ! கண் மூக்குக்கூட தெரிவதில்லை. நான் முந்தி, நீ முந்தி என்று இடித்துக்கொண்டு, திறந்தவனையும் இடித்துத் தள்ளிவிட்டு, குறும்பாடுகளைப்போல் உட்புகுவோம். இதிலிருந்து எங்கள் பெட்டி அறைமீது யாம் கொண்ட பாசம் வெளிப்படுகிறதல்லவா ?

பெட்டி அறையிலே பண்டம் இல்லாவிட்டால், பொருளைப் பறிகொடுத்தவர் போன்று, காசு எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக வடைக் கடைக்குச் செல்வர் சிலர். பசி எடுக்காவிட்டால் கூட ஒரு முறை பெட்டியைத் திறந்து மூடுவதில் ஒருவித திருப்தி. வரப் பிந்திவிட்டால், மூங்கில் தட்டி இடுக்குவழியே பெட்டியை ஓர் முறை உற்றுப் பார்த்து பெருமூச்சுடன் திரும்புவர், சில தோழமைகள் ; அவ்வளவு ஆசைப்பற்று. எம் உடைமையே இப்பெட்டி என்ற வீடுதானே. இதோ ! உள்ளே நுழைவோம் விடியற் காலம் விடிந்ததும் விடியாததுமாய் மாடியை விட்டு இறங்கி அரைகுறை ஆடைகளோடு தஞ்சம் புகுவது தாயகமான இவ்வறையிலேதான். தூங்கிவழியும் முகத்துடன் யாரோடு முட்டிக்கொள்ளலாம் என்ற மயக்கத்தோடு தள்ளாடி வரும்போது, எங்களுக்கு இடம் தந்து ஆதரவளிப்பது, இத்தஞ்ச ஸ்தாபனமே. நுழைந்துவிட்டீர்களா ? தலையில் காயமில்லையே !

வீட்டிலிருந்து வந்து இரண்டு, மூன்று வாரங்கள் வரை வீட்டிலே அம்மா அருமையாய் செய்துதந்த பலகார வாசனை, யில் பிரசித்திபெற்ற லாலா கடையும் தோற்றுவிடும் ! மாம்பழக் காலத்தில் அமுதின் இனிய அக்கனியின் மணம் வீசும் ! குற்றால

உல்லாசப் பிரயாணம் சென்று வந்தால், ஒரு வாரத்துக்கு முக் கனியின் மணம் கம கமவென்று எழும். பெட்டி திறக்கும் போதெல்லாம் வறுத்த மாவு காற்றில் பறக்கும். காராச் சேவு இறக்கை கட்டிக்கொண்டு திரியும். நிலக்கடலைத் தோல்கள் ஓடம்போல மிதக்கும். பட்டாணிக் கடலைகள் உருண்டோடும், முத்துக் குளிக்கும் இக்காலத்தில். நம் தமிழகப் பெண்கள் சிறு வீடுகட்டி முத்தை வைத்துக் கழங்காடி அவற்றை அங்கேயே விட்டு விட்டு ஓடிவிடுவர். அருவி நீர் அவர்தம் சிற்றில்களோடு முத்துக்களையும் கொண்டோடும் என்று படித்திருக்கிறோம். அவ் வளவு செழிப்பு இக்காலம் எம்பெட்டி அறையில் மட்டுமே. இம் முத்து முதலியவற்றைச் சேகரித்துவைக்க ஓர் இடம் வேண்டு மல்லவா? அதுதான் இருக்கிறதே! வெளியே இரு காவற்கார டின்கள்.

மகிழ்ச்சி பொங்குமிடம் வந்துவிட்டோம். இங்கேதான் பேச்சுக்கலை அபரிமிதமாக எழும்பும். கற்பனை, கவிதா ரஸத் துடன் வெளிவரும். அரற்றைக் கச்சேரி ஆரம்பித்து விடும். இசைகளின் விநோதங்களும், தினுசுகளும் பற்பல விதங்களில்! அருகில் வண்ணான் தாத்தா இருந்தால் அவருடைய வாக னத்தை ஓட்டவேண்டிய அவசியம்கூட ஏற்படாது. அதாகவே ஓட ஆரம்பித்துவிடும். ஆயினும் இப்படிப்பட்ட அபஸ்வரங் களுக்கு நடுவே, இன்ப கீதங்களும் எழும் என்பதை மறக்க வேண்டாம்.

பாடல் மூலமே ஒருவரையொருவர் ஜாடையாகத் திட்டிக் களிப்பது உண்டு. ஆனால் வைராக்கிய யுத்தம் ஏற்படாது. பெட்டியறை என்றாலே 'ஜாலி' தான். இன்பக் களஞ்சியம் எம் பெட்டியறை. மகிழ்ச்சிக் கடல் எம் பெட்டியறை! இவ்வளவு ஆரவாரங்கட்கு இடையும் 'கேற்' புஷ்பக்காவின் ஓர் சிறு தொனிக்கு எவ்வளவு மதிப்புத் தெரியுமா? அத்தனைபேரும் ஆவ லுடன் திரும்பிப் பார்ப்போம். 'எனக்கு ஆள் வந்திருக் கிறதா?' என்ற கேள்விக் குறியுடன்.

இதோ! எம் சிங்கார சிற்றூர். வானவில்லில் இல்லாத பல வித வண்ணங்களையும் உடைய பெட்டிகளை அங்கு பார்க்கலாம். வண்ண வேறுபாடுகளை அறியவேணுமா? இதோ! இங்கு சில பெட்டிகள் பார்வைக்கு குடிசைபோல் காணும்.

வேறு சில அரண்மனைபோல் காட்சி அளிக்கும். பெட்டிக்கடை ஒன்றில் இத்தனை பெட்டிகள் உண்டா? மாணவிக்கு இரண்டு பெட்டி வீதமும் உண்டு. இப்பெட்டிகளிலுள்ள விசேஷம் என்ன வெனில், இங்கு ஒரு சிலரது பெட்டியிலே நாம் படுத்துத் தூங்க லாம். ஆமாம், அவ்வளவு பெரியவை!

கொலுவுக்குக் கூட அவ்வளவு ஒழுங்காக அழகுற பொம்மை களை அடுக்க முடியாது. ஆனால் இங்கோ, இறுதி வகுப்பினர் நின்றுகொண்டும், முதல் வகுப்பினர் உட்கார்ந்து, குனிந்து கொண்டும் வரிசை வரிசையாய் அமர்ந்து பெட்டியைத் திறப் போம். பாவையர் மட்டுமா காட்சி தருவது இக் கொலுவிலே! ஒரு பக்கத்திலே பலவித வண்ணஜால பிடியுடைய குடைகள் தொங்கும். மற்றொரு புறத்திலே காலணியான பல வண்ண வேலைப்பாடுள்ள செருப்பு ஜோடிகள், அலங்கார உயர் ஆசனத் தில் வீற்றிருக்கும்.

பெட்டிக்குள் என்ன? உடைகளை எடுத்துக் கொண்டால் ஜவுளிக்கடைக்காரர் வந்து மாதிரி பார்த்துச் செல்லவேண்டும். எம் மிகவும் விலையுயர்ந்த பட்டாடைகளை வெகு பத்திரமாய் வைத்திருப்பது பெட்டிக்குள்ளேயே. மேலும் பல வகை யான பவுடர்டின்கள் வாசனை கமழும் எண்ணெய் வகை, ஸ்நோ, சென்ட் என்று அழகாக அடுக்கி வைத்திருப்பதைப் பார்த்தால், கிறிஸ்துநாதர் அனுசாரத்தின் "வியர்த்தங்களில் வியர்த்தம் எல்லாம் வியர்த்தம்" என்ற வசனத்தை எம் பெட்டியைக் கண்ட பின்னர்தான் எழுதினர் என்று ஐயப்படலாம். ஓர் கையில் முறுக்கு மறு கையில் சீப்பு.

நாங்கள் போதிக்கவேண்டிய தினம் என்றுவிட்டால் வளை யம், வலையுடன் தோன்றுவோம், ஜோடி ஜோடியாய் ஜோடனை செய்துவிட. சினிமாவில் செய்யப்படும் 'மேக்கப்' எல்லாம் பெட்டியறையில் நாங்கள் செய்யும் மேக்கப்பிடம் பிச்சை வாங்க வேண்டும்.

அப்பெட்டி அறை சம்பந்தமான ஓர் சில அவஸ்தைகளும் உள. இப்படிப்பட்ட அலங்கார மாளிகையை விட்டு வெளிவர மனம் வருமா? கடினம் தானே! ஆனால் மணி என்ற அந்த உயிரற்ற பொருளுக்கு எம் உணர்ச்சி தெரியுமா? பாதி சாப் பிட்டு, பாதி அலங்கரித்துக் கொண்டிருக்கும் போதே "விளை

யாட வா” என்று அழைத்துவிடும். அந்நிலையில் அசைவது யார்? ஒருவராவது திரும்பிப் பார்க்கமாட்டோம். மோக்ஷ வாசலை மூடுபவள் கதவை மூட முன் வந்து நின்றுகொண்டு “எல்லோரும் வெளியே வாருங்கள், கதவைப் பூட்டப்போகிறேன்,” என்று கம்பீர சங்கநாதம் ஒலிப்பாள். கதவைத் தட்டி ஆர்ப்பரிப்பாள். ஒருவாறு வெளியேறுவோம். சில வேளை பயங்காட்டும் விதத்தில் “விடுதித் தாயார் வருகிறார்” என்று மெல்ல கூறுவாள். அந்த விசை மந்திரம், அனைவரையும் வெளியேற்றி விடும். அரை அலங்காரம் அரைப் பட்டினியுடன் சாவியை உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுத் திண்டாடி, வெளியே ஓடி வருபவர் சிலர். மறுதினம் இம்மகாத்மாக்கள் பெட்டி முன் நின்று சாவி பகவானைத் தேடினால் அவர் வருவாரா? யாரிடம் அதே பகவான் இருக்கிறாரென்று ஒவ்வொருவரையும் வினவும் வேலை வேறு வந்துவிடும். திறக்க இயலாவிடில் இரண்டு அருவிகள் வீழ்ச்சியுறும். திறந்துவிட்டாலோ ஆனந்த நடன அரங்கேற்றந்தான் பெட்டியறையில் நடைபெறும். வெளி வர தாமதித்து சில பேர் உள்ளே பூட்டப்பட்டு சில மணி நேரம் பெட்டியறையைச் சிறைக்கூடமாகவும் பயன்படுத்தி இருக்கின்றனர். சிறைவாசம் சிலருக்கு சுதந்திர வாசமாகும். பெட்டிக்குள் இருக்கும் பலகாரத்துக்கு வந்தது வினை அன்று. உள் நின்று தலை சீவாதே. கழிவு முடியை டின்னில் போடு என்ற விதியைப் பழிப்பவருக்கு 3 பைசா கிடைக்கும். லாபமா? இல்லை! அபராதம். விரைவில் அதை மறந்து மீண்டும் அங்கேயே தலை சீவி சிங்காரிப்பர் எலிவால், கட்டைவால் கூந்தல் அழகிகள்!

மேலும், பிறர் உடைமையை அபேட்சியாதிருப்பாயாக, என்ற கற்பனையைப் படியாத சில அழையா விருந்துமுண்டு எம் பெட்டி அறைக்குள்ளே. திடீர் என்று காணமற் போகும் சட்டை, அணி ரிபன், எங்கே? வளைகட்குள் எடுத்து வைத்திருப்பர் அத்திருட்டு எலிகள். பெட்டி அறை கூரைக்குள் அவர்கள் வீடு இருக்கும்போது என்ன குறை? தயாள குணம் உடையது எங்கள் பெட்டி அறை என்று தெரியவில்லையா?

பெட்டி அறைக்குள் இரும்புப் பெட்டிகள் போன்று நான்கு மிகப் பெரிய பெட்டிகள் இருக்கின்றன. அசைக்க இயலாதவை.

அவை, எங்கள் அழுக்குத் துணிகளின் அடைக்கல ஸ்தலம். ஞாயிற்றுக்கிழமை திங்கள்கிழமைகளில் 9 மணிக்கு முன்னால் அப்பெட்டியைப் பார்த்தால் மூடுவதற்கு முதலாய் முடியாமல் துணிகள் சுற்றிலும் சிதறிக் கிடக்க, மேலும், மேலும் துணிகள் போடப்பட்டு ஓர் சிறுமலைபோல் குவியலாகக் காட்சியளிக்கும்; பூந்திமலைக் குவியல்போல! அடடா! மறந்துவிட்டேன், இன்று திங்கட்கிழமை அல்லவா? என் துணிமணிகளை அழுக்குப் பெட்டியில் போடவேண்டும். ஆமாம்! இதோ இப்பொழுது தான் பெட்டி அறை திறந்திருக்கிறது. நான் ஓடுகிறேன். இல்லாவிட்டால் பூட்டிவிடுவார்களே! பின் நான் என்ன செய்வது! வருகிறேன்.

Sec. Gr. Seniors, 58—59

ஓர் சில வேண்டுகோள்

நம் பழைய மாணவியரில் அநேகர், தம் முதல் குழந்தையின் பிறப்பை உடனே மகிழ்வுடன் தெரிவிப்பர். 2-வது குழந்தையின் பிறப்பைத் தெரிவிப்பவர் பாதிப்பேர்தான். 4-வது குழந்தைக்குப்பின் வெகு சொற்பப் பேரே தெரிவிப்பதால் திடீரென்று சிலவேளைகளில் பழைய மாணவர் சிலர் வரும்போது, நமக்கு வெகு பிரமிப்பளிக்கிறது அவர்தம் செய்திகள். 1934-ல் பயின்ற ஸ்ரீமதி ஞான சௌந்தரி இவ்வாண்டு வந்தபோது சொன்ன செய்தியாவது, "எனக்கு 9 குழந்தைகள் இருக்கின்றார்கள். மூத்த பையன் யேசு சபையில் சேர்ந்துவிட்டான். இன்னொரு பையன் குரு மடத்தில் படிக்கிறான். மற்றொருவன் கல்லூரியில் பயின்று வருகிறான். ஓர் பெண் மடத்தில் சேரப்போகிறாள்." அதே ஆண்டு படித்த ஸ்ரீமதி லூர்து, சென்னைப்பட்டணத்திலிருந்து தன் இரு குழந்தைகளோடு வந்திருந்தார். அவ்வமயம் தனக்கு ஆறு ஆண் குழந்தைகளும் ஓர் பெண் குழந்தையும் இருப்பதாகவும், மூத்த பையன் எஞ்சினியர் அலுவலுக்காக படிப்பதாகவும் தெரிவித்தபோது எவ்வளவு மகிழ்ச்சி !

இப்படி மகிழ்ச்சியைக் கொடுக்கும் சங்கதிகளை தம்மோடு பயின்ற மாணவரும் அறிந்துகொள்ளுமாறு, அவ்வப்போது தெரியப்படுத்தலாம் அல்லவா ? ஆகவே, இனியாவது, பழைய மாணவர்களே, உங்கள் குடும்பத்தில் ஏற்படும் சந்தோஷ செய்திகளை நம் தோழியருடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

மணம் ஆகும் நம் பழைய மாணவிகள் அத்தாட்சி பத்திரத்திலுள்ளபடி தம் பெயர், தாம் பயின்று முடித்த வருடம், எண் — இவ்விவரங்களையும் விலாசம் மாறுமாயின் அவ்விலாசத்தையும் திருமண அழைப்பின் பின்புறம் எழுதித் தெரிவிக்க மறவாதீர். சுமார் 2000 பழைய மாணவர்கள் நம்மவர். இவர்கட்குள் எத்தனை இஞ்ஞாசியம்மாள் ! செபஸ்தியம்மாள் ! தெரஸ் ! லக்ஷ்மிகள் ! ஆகையால் திட்டமான விவரத்தைத் தெரிவியுங்கள் எப்போதும். மடத்துக்குப் போகும் மாணவியர் தம் வஸ்திரம், வார்த்தைப்பாடு விவரங்களை பெற்றோர் மூலமாகவாவது தெரிவிப்பீர்களா ? மடம் புகுமுன் ஆயுள் சந்தாதார் ஆகிவிட முன்வருவீர்களா ?

நம் ஹையர் கிரேடு பழைய மாணவியரில் சிலர் **S. S. L. C.** தேர்ச்சியடைந்து, செக்கண்டரி கிரேடாக மாறியுள்ளனர். அவர்கள் யாரார் என்பதை தெரிவிப்பீர்களாயின், அடுத்த ஆண்டு மலரில் அவர்கள் பெயரை பெருமையுடன் வெளியிடு வோம்.

பள்ளிக்குக் கிறிஸ்மஸ் வாழ்த்து அனுப்பும் மாணவர் அனை வருக்கும் பதிலிட முடியாததால் அனைவருக்கும் எம்து வந்த னத்தை இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம். பதில் அவசர மான கடிதங்களுக்கு மாணவர் முத்திரை உள்வைத்து அனுப்பு வது பேருதவியாகும். அன்புள்ள மாணவியரே அடுத்தாண்டு வாருங்கள் கூட்டத்துக்கு. வரத் தவருதீர் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

நித்தியத்துக்கும் இளைப்பாறுவார்களாக!

25/53-ல் **Hr. Gr.**-ல் படித்த ஸ்ரீமதி **S.** குழந்தை ஜோசப், "20—6—57 முதல் மல்லிப்புத்தூருக்கு மறு பயிற்சிக்குப் போயிருந்த சமயம் நோய்வாய்ப்பட்டு, 2—10—57ல் கர்த்தருக் குள் நித்திரை அடைந்துவிட்டாள். ஆதரவற்ற $1\frac{1}{2}$ வயது குழந்தையும் இறந்துவிட்டது" — என்று குழந்தையின் கண வர் தெரிவித்தார்.

8/56-ல் **A.** நல்லமுத்து — 4 நாட்கள் நிமோனியாவினுல் கஷ்டப்பட்டு 27—3—58-ல் அமரிக்கையான மரணம் அடைந் தாள். பள்ளியில் என்றும் யாருக்கும் கஷ்டம் அளித்ததில்லை. சதா புன்னகை. சிறு குழந்தைத் தன்மை. புதுப்பட்டியில் ரேணுகா பள்ளியில் திருப்திகரமாய் வேலை பார்த்து வந்தாள். மரிக்கு முன் தன் தாயாரை ஜெபம் சொல்லச் செய்து ஆண்ட வரில் நித்திரையடைந்தாள்.

EVER READY

SACRED-HEART TRAINING-SCHOOL SRIVILLIPUTTUR